பெறுவதற்கு பல்வேறு துறைகளின் மூலம் சென்று வருகின்ற காரணத்தால் தான் கொஞ்சம் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அதற்குள்ளாகத் தான் இந்தப் பணிகளை நான் சொல்லியிருக்கிறேன். எனவே, மாற்று ஏற்பாடாக இந்தப் பணிகள் நடக்க இருக்கின்றன. ஆகவே, துணை மின்நிலையமும் வரும்; இந்தப் பணிகளும் நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *391*, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

391–

கூட்டுறவு சங்கத்தில் வீடுகட்ட கடன் வழங்குவதற்கு சிறப்பு ஆய்வுக் குழு ஏற்படுத்துதல்

22121–டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தாலுகா கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தில் வீடுகட்ட மானியத்துடன் கடன் வழங்கும்போது சரியான பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க ஒரு சிறப்பு ஆய்வுக் குழு ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே வினா எழவில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்களுக்காக வீட்டுவசதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு மாநில அரசால் மானியத்துடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும்போது, அரசு வகுத்துள்ள விதிமுறைகள் என்ன? அந்த பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் வட்ட அளவில் ஒரு குழு அமைத்து, அதன் மூலமாகப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 26]

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் வசிக்கும், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் குறைந்தபட்சம் ஒரு சென்ட் நிலம் வைத்திருக்க வேண்டும் அல்லது அவர்களுடைய மாத வருமானம் ரூபாய் 1050/–க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். இப்படி இந்த இரு தகுதிகள் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலமாக, மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது. இதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு குழு அமைக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. ஏனென்றால், ஆண்டுதோறும் இந்தத் தகுதி உடையவர்களிடத்திலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவர்களுடைய பதிவு மூப்பு அடிப்படையில், அவர்கள் காத்திருப்போர் பட்டியலிலே இருந்தால் அவர்களுக்கும், அதற்குப் பிறகு புதிதாக மனு கொடுப்பவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அப்படி ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவின் மூலமாக கடன் வழங்க வேண்டுமென்ற கருத்துரு எதுவும் அரசிடம் இல்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற குறிக்கோளை அடைவதில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சி முனைப்போடு செயல்பட்டு வருகிறது. பாராட்டுக்கள். கிராமப்புற மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆண்டு இலக்கான 30 ஆயிரம் வீடுகள் கட்டுவது என்பதை மாற்றி, வருடந்தோறும் 50 ஆயிரம் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் கடன் வழங்குவதற்கு, 'அட்கோ' நிதி நிறுவனம் கடனை வழங்குகிறது. 'அட்கோ' நிதி நிறுவனத்திலிருந்து 70 சதவீதம் கடனாகவும், மாநில அரசினுடைய மானியம் 30 சதவீதமாகவும் அங்கே இருக்கப்பட்டு, பயனாளிகளுடைய பங்குத்தொகை உட்பட இன்றைக்கு அவர்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 'அட்கோ' நிதி நிறுவனம், தான் வழங்குகிற கடன் தொகையை உயர்த்தித் தர எந்தவிதமான சூழ்நிலையும் இல்லாத காரணத்தால், 30 ஆயிரம் பயனாளிகள் என்கின்ற குறியீட்டை கூட்டித் தருவதற்கு எந்தவிதமான கருத்துருவும்

அல்லது கூட்டித்தர இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தேனி பன்னீர்செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வீடுகட்டுவோர் சங்கங்களில் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கின்றபோது ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு அவசியம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய மிகவும் நலிவடைந்த மக்களின் நலனைக் கருதி, குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜே.வி.வி.டி. மூலம் அரசு வீடு கட்டி, வழங்குகிறது. அதைப்போல, அதற்கு அடுத்தபடியாக மிகவும் நலிவடைந்த சமுதாயத்தைச் சேர்ந்த, குறிப்பாக, சீர்மரபினர் என்கின்ற பிரிவைச் சேர்ந்தவர்கள், எம்.பி.சி. என்கின்ற கேட்டகிரியில் வருகின்றார்கள். அவர்களுக்கு, அந்தப் பயனாளிகளைத் தேர்வு செய்யும்போது முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற ஒரு உத்தரவை அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குவதற்கு எந்தவிதமான முன்னுரிமையும் வழங்க இயலாது. அப்படி முன்னுரிமை வழங்க வேண்டுமென்று சொன்னால், ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தகுதியைக் கூறி, தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்கின்ற சூழ்நிலை வரும். எனவே, காத்திருப்போர் பட்டியல் அங்கே வரையறுக்கப்பட்டு பதிவு மூப்பு அடிப்படையில் இன்றைக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 392, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

392–

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட செங்கல் சூளை மற்றும் கயிறு திரித்தல் தொழில்களுக்கு நிதி உதவி அளித்தல்.

***16894–டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் மற்றும் பெரு வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான செங்கல் சூளை மற்றும் கயிறு திரித்தல் முதலிய தொழில்களை மறுபடியும் தொடங்க அரசு நிதி உதவி செய்யுமா?